**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.02/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.17**
**Defence**
**Court**

**Name : முத்துக்குமாரசாமி**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 11.03.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தென்காசி மாவட்டம் எல்.ஆர்.எஸ் பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலக்கடை பஜாரில் குருமெடிக்கல்ஸ் என்ற பெயரில் மருந்துக்கடை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. இறந்த குமார்பாண்டியன், சக்திபாண்டியனை , சுரேஷ், சேகர் ஆகியோரை தெரியாது.

சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் பொதுவாக காலை 10.30 மணிக்கு கடையை திறப்பேன். 14.08.2007 அன்று நான் கடையை திறக்க வில்லை. போலீசார் என்னை கடையை திறக்க அனுமதிக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>:-**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரனையில் தென்காசி கூலக்கடை பஜாரில் 14.08.2007ம் தேதி காலை 10.00 மணிக்கு எனது மருந்துக்கடையில் இருந்தபோது, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகத்தை சேர்ந்த ஜபர்சாதிக், என்ற ஜாகிர் உசேன், சுபகான் ஜவுளிக்கடை இஸ்மாயில் ஆகியோர். சந்திக்கும் பகுதிகளில் மலையப்பன், பூக்கடைரமேஷ் மற்றும் ஆட்டோ ரமேஷ், ஆபிரகாம் மற்றும் ஆகியோரும் அங்கும் இங்கும் நடமாடிக்கொண்டடிருநதபோது காலை 10.15 மணிக்கு TN 76 B 3448 என்ற ஆட்டோவில் சிலர் அங்கு வந்தனர் என்றும் அலாவூதீன், மோட்டார் சைச்சிளில் கிழக்கு நோக்கி சென்றார்கள் என்றும் அவர்களளுடன் ஆட்டோவில் வந்தவர்களும் சென்றார்கள் என்றும் என் கடையை தாண்டி கிழக்கே சென்றதும் பெரும் சப்தம் கேட்டது என்றும் நான் வெளியே வந்து பார்த்தபோது, மேலமுத்தாரம்மன் கோயில் தெருவிலும எல்.ஆர்.எஸ் பாளையம் சந்திப்பிலும் ஒருவரை யொருவர் மாறி மாறி வெட்டி தாக்கிகொண்டனர் என்றும், நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றும், கலவரம் முடிந்ததும் நான், ஓடி வந்து கடைக்குள் ஒளிந்துகொண்டேன் என்றும் சம்பவத்தில் சேகர் சுரேஷ், செந்தில், அசன்கனி, பசீர், நாகூர்மீரான்

இறந்துபோனார்கள் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடைநடத்தும தெருவில் மொத்தம் மூன்று ஆங்கில மருந்துக்கடைகள் உள்ளது. பானுமெடிக்கல், இந்திரா மெடிக்கல் ஆகிய இரண்டு மருந்துக்கடைக்கள் உள்ளது. நான் குடியிருக்கும் பகுதியில் நாயுடு சமூகத்தினர் அதிகம் குடியிருக்கிறார்கள். நான் குடியிருக்கும் பகுதியிலும் கடை நடத்தும் பகுதியிலும் இஸ்லாமியர்கள் அதிகம் வசிக்கினர்கள் என்றும் அதிகம் பேர் தொழில் செய்து வருகின்றனர் என்றும் அதனால் எதிரிகளை தெரியும் என்றால் சரியல்ல. பொதுவாக கடையை இரவு 11.00 மணி வரை நடத்துவோம் என்றால் சரியல்ல. தற்போது வியாபாரம் குறைவு என்பதால் தான் 11.00 மணிவரை கடையை நடத்துகிறோம். பொதுவாக மற்ற கடைகளை சீக்கிரம் முடிவிடுவார்கள் மருந்துக்கடைகள் மட்டும் தான் நள்ளிரவு வரை திறந்திருக்கும். நள்ளிரவு நேரத்தில் கடை திறந்திருக்க வேண்டும் என்ற நிலையில் எதிரிகளால் ஆபத்து ஏற்படக்கூடும் என்ற பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கடைக்கு நேர் பின் பகுதியில் குடியிருக்கிறேன் காலை சுமார் 8.00 அல்லது 8.30 மணி யளவில் வீட்டை விட்டு வெளியே வருவேன். என் மகனை காலை 9.00 மணிக்கு பள்ளியில் விட்டு விட்டு என் கடைக்கு தேவையான மருந்துகனை மொத்த விற்பனை கடையில் இருந்து வாங்கி கொண்டு கடைக்கு திரும்புவேன். எனக்கு தென்காசியில் உள்ள பொதிகை மெடிக்கல் கடையை தெரியும். எனக்கு தேவையான மருந்துகளை அந்த கடையிலும் வாங்குவேன். பொதிகை மெடிக்கல் கடையில் உள்ள எவரையும் எனக்கு தெரியாது. மருநதுக்ககடை உரிமையாளர்கள் சங்க கூட்டம் நடைபெறும் அதில் யார் யார் கலந்துகொள்வார்கள் என்று எனக்கு தெரியாது. நான் 26 வருடமாக மெடிக்கல் நடத்துகிறேன். பொதிகை மெடிக்கல் சம்சுதீன் என்பவர்

இவ்வழக்கில் எதிரி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் எதிரிகளை காப்பாற்றும் பொருட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் ச ரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.02/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ**.**சா**.15**
**Defence**
**Court**

**Name** **: ஆறுமுகம்**

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 11.03.2022

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் இளஞ்சியில் குடியிருந்துவருகிறேன். நான் தென்காசியில் மேலமுத்தாலம்மன் கோயில் தெருவில்அச்சகம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இறந்த குமார்பாண்டியன், சக்திபாண்டியனை ஆகியோரை தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள். அவர்களிடம்

சம்பவம் பற்றி தெரியாது என்று சொன்னேன்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் என்னை விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி காலை 10.15 மணிக்கு என்னுடைய அச்சகத்தில் பணிபுரிந்துகொண்டிருந்தபோது எனது அச்சகத்திற்கு கிழக்கு பக்கம் வாகனங்கள் மோதிக்கொள்ளும் சப்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தபோது அம்பாசிடர் காரும், இருசக்கர வாகனமும் மோதிக்கொண்டது தெரியவந்தது. அப்போது கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி இரண்டு ஆட்டோகளில் சிலர் ஆயுதங்களுடன் வந்து இறங்கினார்கள் என்றும் அவர்களை காரில் இருந்து இறங்கியவர்கள் தாக்கினார்கள் என்றும் காரில் வந்தவர்கள் சக்தி பாண்டியன் மற்றும் அவரது தரப்பினரையும் தாக்கினார்கள் என்றும் இருசக்கரவாகனம் அலாவூதீன் என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் என்றும் தெரிந்து கொண்டேன் என கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அதே சமயம் கடைவீதியில் ஏற்கனவே தயாராக இருந்த வேறுசிலரும் ஒருவரே ஒருவர் மறித்து விரட்டி வெட்டியும் குத்தியும் தாக்கினார்கள் என்றும் என் கடைக்கு மேற்கு புறம் உள்ள டீக்கடை முன்பு செய்யது அலி என்பவர் பட்டாகத்தியுடனும் மீரான் மைதீன் அரிவாளுடன் சுரேஷ் என்பவரை தாக்கியும் நாவாஸ் என்பவரும் நாகூர் மீரான் என்பவரும், செயய்து சுரைலமான் சேட் என்பவரும் செந்திலை அரிவாளால் வெட்டினார்கள் என்றும், சண்முகம் மற்றும் முருகேசன் ஆகியோரை இரும்பு பட்டையால் தலையில் அடித்தனர் என்றும், அலக்ஸ் என்ற அலெக்சான்டர் அரிவாளால் நாகூர்மீரானையும், அசன் கனினையும்

வெட்டினார்கள் என்று பிஸ்தா மணி என்ற மணிகண்டன் அசன் கனியையும் பசீரையும் வெட்டினார் என்றும், நான் சம்பவத்தை கண்டு பயந்துபோய் கடையின் கதவை பூட்டி கடைக்குள் மறைந்துகொண்டேன் என்றும் கலவரம் குறைந்ததும் நான் வீட்டிற்கு சென்றேன் என்றும் அந்த சம்பவத்தில் சேகர், சுரேஷ், அசன் கனி, பசீர், நாகூர் மீரான், இறந்துபோனதாக கேள்விபட்டேன் என்றும் கூறியிரக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இளஞ்சி மேல்நிலைப்பள்ளி அருகில் குடியிருக்கிறேன். 22 ஆண்டுகளாக தென்காசி மேலமுத்தாரம்மன் கோவில் தெருவில் அச்சகம் நடத்தி வருகிறேன். என்னுடைய அச்சகம் உள்ள பகுதி கடைவீதிக்கு அருகில் உள்ளது. அந்த கடைவீதியை ஒட்டி உள்ள பகுதியில் அதிகம் இஸ்லாமியர்கள் வசிக்கிறார்கள் என்றால் சரியல்ல. நான் 22 ஆண்டுகளாக அதே இடத்தில் தொழில் செய்து வருவதால் எனக்கு வாடிக்கையாளர்கள் பல சமுதாயத்தினரும் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனவே எனக்கு எதிரிகளையும் இறந்துபோன குமார்பாண்டியனையும் அவரது குடும்பத்தினரான சக்தி பாண்டியனையும் சுரேசையும் தெரியும் என்றால் சரியல்ல. போலீசார் ஒரு வாரம் அந்த பகுதியில் நடமாட விடவில்லை. எதற்காக அவ்வாறு நடமாட்டம் இல்லை என்று தெரியாது. குமார் பாண்டியன் இறந்துபோனது சம்பந்தமாக முன் விரோதம் இருநதது எனக்கு தெரியாது. அதன் தொடர்ச்சியாக சக்தி பாண்டியன் வகையறாவும் நாகூர் கனிபா வகையறாவும் ஒருவரை ஒருவர் தாக்ககி கொண்டது தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல. நான் கடை நடத்தும் பகுதியை சுற்றிலும் இஸ்லாமியர் கள் அதிகம் வசிக்கும் பகுதி என்பதால் எதிரிகளுக்கு பயந்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தென்காசி அரசு மருததுவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு எனக்கு சிகிச்சை அளித்த போது என் பெயர் விபரம்

எழுதி கொண்டார்கள். எனக்கு புறநோயாளி அனுமதி சீட்டு வழங்கினார்கள் அது என்னிடம் இல்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு செல்ல வில்லை என்றால் கடைடைய திறந்திருப்பேன் என்றால் சரிதான். என்கடைக்கு அருகே வருஷா டிஜிடல் பிரஸ் என்ற அச்சகம் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கடைவைத்திருக்கும் பஜாரில் எத்தனை ஜவுளி கடை உள்ளது என்று தெரியாது காஜிமுஸ்தபா என்ற ஜவுளிகடை உள்ளது. நான் மீண்டும் கடைக்கு சென்று அச்சக வேலை செய்வதற்கு ஒரு வார காலம் ஆனது இடைப்பட்ட காலத்தில் எந்த வேலையும் செய்யவில்லை. சுமார் 10 தினங்கள் வரை எந்த வேலையும் இல்லை அதன் பின்னர் சிறிய அளவில் வேலைகள் கிடைத்தது. (எதிரி தரப்பில் தொடர்புடைய கேள்விகள் அல்ல என்று ஆட்சேபிக்கப்பட்டது). நான் அன்றைய தினம் மருத்துவமனைக்கு சென்றது பொய் என்றால் நான் கடையில் இருநது சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாவேன் என்றும் எதிரிகளுடன் சேர்ந்துகொண்டு கண்ணுற்ற சம்பவத்தை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.02/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா.16**
**Defence**
**Court**

**Name** **:** பீர்முகம்மது

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 11.03.2022

<u>முதல் விசாரணை</u>:

நான் தென்காசியில் உமரேபாருக் தெருவில் குடியிருக்கிறேன். கூலக்கரை பஜாரில் யாசின் ஸ்டோர் என்ற பெயரில் ஜெனரல் மெர்ச்சன்ட் கடை நடத்தி வருகிறேன். நான் பொதுவாக காலை 10.30 மணிக்கு கடையை

திறந்து இரவு 11.30 மணிக்கு கடையை அடைப்பேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. சுமார் 3 நாட்கள் கடையை மூடியிருந்தேன். 14.08.2007 ம் தேதி நடைபெற்ற சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. குமார் பாண்டியன், சக்தி பாண்டியன், சுரேசை தெரியாது. குமார் பாண்டியன் என்பவர் இறந்தது பற்றி தெரியாது, தென்காசியில் தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்ற கழகம் என் கட்சி உள்ளதா என்று எனக்கு தெரியாது. இந்துமுன்னனி அமைப்பு பற்றி தெரியாது.

<u>**இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது**</u>:-

<u>**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

போலீசார்கள் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீசார் என்னை விசாரித்தபோது தினமும் காலை 10.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிக்கு கடையை அடைத்துவிடுவதாகவும், என் கடை கூலக்கடை பஜாரில் உள்ளது என்றும், எனது கடை அமைந்துள்ள கடைவீதியில் இருதரப்பினரும் ஒருவரை யொருவர் கத்தி, இரும்புபட்டை, அரிவாள் ஆகியவற்றால் ஒருவரை ஒருவர் தாக்கி கொண்டனர் என்றும் இதை கண்டதும் கடைக்காரர்கள் கடையைபூட்டிவிட்டு ஓடினார்கள் என்றும் நானும் கடையை பூட்டி விட்டு ஓடிவிட்டேன் என்றும், கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் விசாரித்தபோது அவ்வாறு கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூலக்கடை பஜாரில் 30 ஆண்டுகளாக கடை நடத்தி வருகிறேன். எனக்கு 4 மக்கள் உள்ளனர் 2 பெண்கள், 2 ஆண்கள் ஆவார்கள். 2 பெண்களை

வெளியூரில் திருமணம் முடித்து வைத்துள்ளேன். ஒருவர் இதே கடையை நடத்தி வருகிறார். மற்றொருவர் கட்டுமான வேலை நடத்தி வருகிறார். தென்காசியில் 5 ஆண்டுகளாக கட்டுமான வேலை செய்கிறார். என் மகன் நடத்தி வரும் தொழில் தொடர்பாகவும், நான் நடத்திவரும் தொழில் தொடர்பாகவும் வாடிக்கையாளர்கள் உண்டு. தாஜ்மியான் பள்ளிவாசல் அரிப்புக்கார தெருவில் உள்ளது. நான் தவளபுரம் தெருவில் உள்ள ஜமாத்துக்கு கட்டுப்பட்டவர். என் கடைக்கு பக்கத்தில் உள்ள முத்து டீக்கடை காலை 5.00 மணிக்கு திறந்துவிடுவார். நான் வழக்கமாக இருசக்கரவாகனத்தில் கடைக்கு வருவேன். 14.08.2007 அன்றும் வழக்கம் போல் 10.30 மணிக்கு கடைக்கு வந்தேன். வந்துகொண்டிருந்தபோது கடைவீதியில் பிரச்சனை ஏற்ப்டிருப்பதாகவும், அங்கு செல்லவேண்டாம் என்றும் கூட்டத்தில் இருந்தவர்கள் கூறினார்கள். மூன்று தினங்கள் கழித்து கடைவீதியில் கலவரம் நடந்ததாக கேள்விப்பட்டேன். யாருக்கு காயம் யார் யாரை தாக்கினார்கள் என்று கேட்கவில்லை. நான் எதிரிகளுக்கு நன்கு அறிமுகம் ஆனவர் என்றும் எதிரிகளில் சிலர் என் உறவினர் என்றும் எனவே அவர்களை காப்பாற்றும் பொருட்டு பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.